# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**10-11-2022**

**Wesite Link** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**Faceook Link** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## முக்கிய தினங்கள்

1. **09-11-22**
   - ❖ உலக அறிவியல் தினம்.

## மாநில செய்திகள்

1. **தமிழகத்தில் 6.18 கோடி வாக்காளர்கள்: பெண்களே அதிகம்**
   - ❖ தமிழகம் முழுவதும் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதன்படி, தமிழகத்தில் மொத்தமாக 6 கோடியே 18 லட்சத்து 26 ஆயிரத்து 182 வாக்காளர்கள் உள்ளனர். அவர்களில் ஆண்களை விட பெண் வாக்காளர்களே அதிகம்.
   - ❖ வரைவு வாக்காளர் பட்டியலின் அடிப்படையில், தமிழ்நாட்டில் இப்போது 6 கோடியே 18 லட்சத்து 26 ஆயிரத்து 182 வாக்காளர்கள் உள்ளனர்.
   - ❖ அவர்களில் ஆண்கள் 3 கோடியே 3 லட்சத்து 95 ஆயிரத்து 103 பேரும், பெண்கள் 3 கோடியே 14 லட்சத்து 23 ஆயிரத்து 321 பேரும், மூன்றாம் பாலினத்தவர் 7 ஆயிரத்து 758 பேரும் உள்ளனர்.
   - ❖ மாநிலத்திலேயே அதிகளவு வாக்காளர்களைக் கொண்ட பேரவைத் தொகுதியாக சோழிங்கநல்லூர் தொகுதியும், குறைந்த வாக்காளர்களைக் கொண்ட தொகுதியாக துறைமுகம் தொகுதியும் உள்ளன.

   ✍ தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி: **சத்யபிரத சாகு**

## மருந்து

1. **இந்திய 2டிஜி மருந்து**
   - ❖ கரோனா பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு, நெஞ்சில் எரிச்சல், ரத்தம் உறைதல், மாரடைப்பு போன்ற பாதிப்புகள் குறைந்தது ஓராண்டுக்கு ஏற்படுகிறது.
   - ❖ கரோனா வைரஸில் உள்ள ஒரு குறிப்பிட்ட புரோட்டீன், இதய திசுக்கள் பாதிப்புக்கு காரணம் என்பதை அமெரிக்காவின் மேரிலேண்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.
   - ❖ இந்த பாதிப்பை குணப்படுத்த இந்தியாவில் டாக்டர் ரெட்டிஸ் லேபரெட்டரி, ராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு மையத்துடன் டிஆர்டிஓ இணைந்து **'2டிஜி (2 டியாக்சி-டி-குளுக்கோஸ்)** என்ற பவுடர் மருந்தை உருவாக்கினர்.
   - ❖ இதை வாய் வழியாக சாப்பிட வேண்டும். இந்த மருந்து, உடலில் சக்திக்கு காரணமான குளுக்கோஸ் உடைவதை தடுத்து, வைரஸின் வளர்ச்சியை தடுக்கிறது.

## மத்திய செய்திகள்

### 1. 50-ஆவது உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக சந்திரசூட் பதவியேற்பு

- ❖ உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த யு.யு.லலித்தின் பதவிக் காலம் நிறைவடைந்தது. இதையடுத்து உச்சநீதிமன்றத்தின் **50-ஆவது தலைமை நீதிபதியாக டி.ஒய்.சந்திரசூட்டுக்கு** குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.
- ❖ தில்லியில் கடந்த 2019-ஆம் ஆண்டு நவ. 9-ஆம் தேதி உத்திரபிரதேச மாநிலம் **அயோத்தியில் சச்சரவுக்குரிய நிலத்தில்** ராமர் கோயில் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்து உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பை அளித்த 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வில் சந்திரசூட் இடம்பெற்றிருந்தார்.
- ❖ சபரிமலை கோயிலுக்கு அனைத்து வயது பெண்களும் செல்லலாம் என்று உச்சநீதி மன்றத்தின் அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பை அமர்வில் இடம் பெற்றிருந்த சந்திரசூட் உள்பட 4 நீதிபதிகள் வழங்கினர்.
- ❖ ராணுவத்தில் பெண் அதிகாரிகளுக்கு நிரந்தர ஆணையம் அமைக்க வேண்டும். என்று சந்திரசூட் தலைமையிலான அமர்வு தீர்ப்பளித்தது.
- ❖ அரசமைப்புச் சட்டப்படி **ஆதார் எண் செல்லுபடியாகும்** என்று உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வில் இடம்பெற்றிருந்த பெரும்பான்மை நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். எனினும் அந்த அமர்வில் இடம்பெற்ற சந்திரசூட், அரசமைப்புச் சட்டம் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது ஆதார் என்று தீர்ப்பளித்தார்.
- ❖ சட்டப் பிரிவு **377-ஐ** ரத்து செய்து, தன்பாலின சேர்க்கை குற்றமல்ல என்று உச்சநீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்தது. அந்த அமர்வில் இருந்த நீதிபதிகளில் சந்திரசூட்டும் ஒருவர்.
- ❖ சட்டப் பிரிவு **497-ஐ** ரத்து செய்து, திருமணம் தாண்டிய முறையற்ற உறவு குற்றமல்ல என்று ஒருமனதாகத் தீர்ப்பளித்த 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வில் சந்திரசூட் இடம் பெற்றிருந்தார்.
- ❖ உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக **2024-ஆம் ஆண்டு நவ.10-ஆம் தேதி** வரை சந்திரசூட் பதவி வகிப்பார்.
- ❖ நீண்ட கால தலைமை நீதிபதியின் மகன்
  - ✓ கடந்த 1978-ஆம் ஆண்டு பிப்ரவரி 22 தேதிமுதல் 1985-ஆம் ஆண்டு ஜூலை 11-ஆம் தேதி வரை, நாட்டில் நீண்ட காலம் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக பதவி வகித்தவர் **ஒய்.வி.சந்திரசூட்.** அவரின் மகன் டி.ஒய்.சந்திரசூட்,
- ❖ கடந்த 2000-ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் தேதி மும்பை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட அவர், 2013-ஆம் ஆண்டு அக். 31-ஆம் தேதி

அலாகாபாத் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். 2016-ஆம் ஆண்டு மே 13-ஆம் தேதி உச்சநீதிமன்ற நீதிபதியானார்.

## 2. இந்தியாவில் 100 வயதைக் கடந்த வாக்காளர்கள் 2.49 லட்சம் பேர்

- இந்தியாவில் 100 வதைக் கடந்த வாக்காளர்கள் **2.49 லட்சம் பேரும்**, 80 வயதைக்கடந்த வாக்காளர்கள் **1.80 கோடி** பேரும் உள்ளதாக தலைமைத் தேர்தல் ஆணையர் **ராஜீவ் குமார்** தெரிவித்தார்.

# தரவரிசை

## 1. 2027-ல் இந்தியா 3-வது பெரிய பொருளாதார நாடாக திகழும்

- இந்தியா **2027-ல் பொருளாதாரரீதியாக 3-வது பெரிய நாடாக உருவாகும்** என்று அமெரிக்காவைத் தலைமையிடமாகக்கொண்டு செயல்படும் சர்வதேச முதலீட்டு வங்கியான **மோர்கன் ஸ்டான்லி** தெரிவித்துள்ளது.
- முதலீடுகளை ஊக்குவிக்கும் பொருளாதாரக் கொள்கைகள், மக்கள்தொகை எண்ணிக்கை, டிஜிட்டல் கட்டமைப்பு ஆகியவை இந்தியாவை பொருளாதாரரீதியாக 3-வது பெரிய நாடாக மாற்றும் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.
- சில நாட்களுக்கு முன்பு அந்நிறுவனம் வெளியிட்ட ஆய்வறிக்கையில் 2030-ல் இந்தியா 3-வது பெரிய நாடாக மாறும் என்று குறிப்பிட்டிருந்தது.
- இந்நிலையில், இந்த வளர்ச்சியை 2027-ம் ஆண்டிலேயே இந்தியா எட்டும் என்று புதிய கணிப்பை தற்போது வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் ஜிடிபி தற்போது 3.4 டிரில்லியன் டாலராக உள்ளது.
- இது அடுத்த 10 ஆண்டுகளில் 8.5 டிரில்லியன் டாலராக உயரும்.
- தற்போது உலகின் பெரிய பொருளாதார நாடுகளின் பட்டியலில் பிரிட்டனைப் பின்னுக்குத் தள்ளி, **இந்தியா 5-வது இடத்துக்கு** முன்னேறி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# உலக செய்திகள்

## 1. அமெரிக்க நாடாளுமன்ற தேர்தல் இந்திய அமெரிக்கர் ஸ்ரீ தானேதர் வெற்றி

- அமெரிக்காவில் அதிபர் தேர்தல் முடிந்து 2 ஆண்டுக்குப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் செனட் உறுப்பினர்கள் தேர்தல் நடைபெறும், இது இடைக்கால தேர்தல் எனப்படுகிறது.
- மிச்சிகன் மாகாணத்தில் இருந்து முதல் முறையாக இந்திய அமெரிக்கர் **ஸ்ரீ தானேதர் (67)** எம்.பியாக வெற்றி பெற்றுள்ளார்.

- அமெரிக்காவில் தொழிலதிபராக இருந்து அரசியல்வாதியான ஸ்ரீ தானேதர், அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு தேர்வு செய்யப்பட்ட **நான்காவது இந்திய அமெரிக்கர்.**

## விருது

### 1. உமையாள்புரம் சிவராமன், இளையராஜாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம்

- திண்டுக்கல் காந்திகிராம கிராமியப் பல்கலையில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில், மிருதங்க வித்வான் உமையாள்புரம் சிவராமன், திரைப்பட இசையமைப்பாளர் இளையராஜா ஆகியோருக்கு கௌரவ டாக்டர் பட்டத்தை **பிரதமர் நரேந்திர மோடி வழங்குகிறார்.**
- **உமையாள்புரம் சிவராமன் (85)**
  - ✓ தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த இவர், தனது 10-ஆவது வயதில் மிருதங்க வாசிப்பில் ஈடுபடத் தொடங்கினார். வாசிப்பில் புதிய உத்திகள், புதுமைகளை ஏற்படுத்திய இவர், **முதல் முதலாக இழைக் கண்ணாடியால் தயாரிக்கப்பட்ட மிருதங்கத்தை** அறிமுகப்படுத்தினார்.
  - ✓ பதனிட்ட தோல், பதனிடாத தோல் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மிருதங்கங்களை தனித்தனியே ஆராய்ச்சி செய்தவர் என்ற சிறப்புக்குரியவர். மிருதங்க வாசிப்பு தொடர்பாக பல்வேறு ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளார்.
- **இசையமைப்பாளர் இளையராஜா (79);**
  - ✓ தேனி மாவட்டத்தை பூர்விகமாகக் கொண்ட இவர், அன்னக்கிளி திரைப்படத்தின் மூலம் திரையுலகத்துக்கு அறிமுகமானவர். நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, மேற்கத்திய இசையில் முறையான பயிற்சியும், புலமையும் பெற்றவர்.
  - ✓ இவர் தமிழ் தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் 10,000-க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு இசையமைத்தவர்.
  - ✓ பத்மபூஷண் பத்ம விபூஷண் ஆகிய இந்திய அரசின் உயரிய விருதுகளைப் பெற்றுள்ளார். கலைத் துறையில் இளையராஜாவின் சேவைகளை கௌரவிக்கும் வகையில், கடந்த ஜூலை மாதம் இவர் மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

.